செய்திவெளியீடுஎண்: 166 நாள்:25.02.2021

## செய்திவெளியீடு

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 2021–பிப்ரவரி, 28–ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு, பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இதில் கலந்து கொள்ளலாம். பங்கேற்கும் மாணவர்கள் அரசால் அறிவிக்கப்பட்ட கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி முகக்கவசம் அணிந்துவரவேண்டும். ஓவியம் வரைவதற்கான சார்ட் காகிதம் அருங்காட்சியகத்தால் வழங்கப்படும். மேலும், வரைவதற்குரிய பொருட்கள் மற்றும் உபகரணங்களை அவர்களே கொண்டுவர வேண்டும். மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியின் அடையாள அட்டை மற்றும் அதன் நகல் ஒன்றினையும் கொண்டுவரவேண்டும்.

| வ.எண் | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| 1 | 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர், மாணவிகள் | உலக நினைவுச் சின்னங்கள் /<br>அறிவியலும் மனிதனும் /<br>தமிழ்பாரம்பரியம்/<br>தேசியநினைவுச்சின்னங்கள். |
| 2 | 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர், மாணவிகள் | எனது பார்வையில் எதிர்காலஇந்தியா /<br>கடல் உலகம் /<br>கிராமக் காட்சிகள் /<br>இந்திய பாரம்பரியம். |

என்ற தலைப்புகளில் மாணவர்கள் தங்களது ஓவியத் திறமையை வெளிப்படுத்தலாம். மாணவ, மாணவியர்களை மேற்படி போட்டிகளில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**